# அரக்கோணம் நகராட்சி

## 2009-2010ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## (1) அமைப்பும் மேலாட்சியும்

**நகராட்சி எல்லை :**

அரக்கோணம் நகராட்சி 1958ம் ஆண்டு வரையில் ஊராட்சி மன்றமாக இருந்தது தமிழக அரசின் 29.05.1958ம் தேதிய அரசாணை எண்.1433ல் கண்டுள்ள உத்திரவின்படி 01.10.1958 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் 29.04.74ம் தேதிய அரசாணை எண்.1133-ன் ஆணைப்படி 01.05.1974 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 10.10.1983ம் தேதிய அரசாணை எண்.852ம் ஆண்டு ஆணைப்படி 01.09.1983-ல் மூன்றாம் தர நகரத்திலிருந்து இரண்டாம் நிலை நகரமாக மாற்றப்பட்டது. 17.04.1984ம் தேதிய அரசாணை எண்.599ன் ஆணைப்படி 17.04.1984 தேதி முதல், முதல் நிலை நகராட்சியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

1) அரக்கோணம் நகர முழுப் பகுதியும் அம்மனூர், பெருமூச்சி, புளியமங்கலம் முதலிய கிராமங்களில் சில பகுதிகளையும் சேர்ப்பிக்கப்பட்ட பகுதியுடன் சேர்த்து 9.06 சதுர கிலோ மீட்டர். இந்நகரம் இரயில்வே என்ஜினியரிங் ஒர்க் ஷாப், சிமெண்ட் கூரை ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை, அடங்கியுள்ள சிறு நகரமாகும். தமிழ்நாட்டிலுள்ள இருப்புப் பாதை சந்திப்பு நிலையங்களில் முக்கியமான ஒன்றாகும்.

2) இந்நகர மக்கட் தொகை 1980ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 59,405 ஆகும். 1991ம் ஆண்டு கணக்கின்படி 71,928 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. 2001ம் ஆண்டு கணக்கின்படி 78686 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நகராட்சி வரம்பில் எவ்வித மாறுதலும் இல்லை.

3) இந்நகரின் அபிவிருத்தி அரசால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முழுமை திட்ட நில உபயோகத்தின் அடிப்படையில் முன்னேற்றங்கள் சீரமைக்கப்பட்டு வருகிறது. அரக்கோணம் நகரம் 13.05 வடக்கு அட்சரேகை மற்றும் 79.43 கிழக்கு தீர்க்க ரேகையிலும் அமைந்து உள்ளது. நகரம் கடல் மட்டத்தில் இருந்து 295 அடி மேலே அமைந்துள்ளது.

முழுமை திட்டம் அரசாணை எண்.729 நாள்.31.08.95-ல் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முழுமை திட்டப்படி நில உபயோகம்.

அ) குடியிருப்பு பகுதி
ஆ) வியாபார பகுதி
இ) இயந்திர பகுதி
ஈ) கல்விப் பகுதி
உ) பொது மற்றும் பகுதி பொது
ஊ) போக்குவரத்து பகுதி மற்றும்
எ) விவசாய பகுதி என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அதிக பட்சம் 278.92 ஹெக்டேர் நிலம் 42.60% சதவீதம் குடியிருப்பு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரில் இரு பூங்காக்கள் வேதாசலம் பூங்கா மற்றும் காந்தி பூங்கா ஆகியன இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் மையப்பகுதியில் டவுன்உறால் என்ற டவுன் கிளப் தனியார் நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சியில் தற்போது தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள " இளைஞர் விளையாட்டு மையம், மனமகிழ் மன்றத்திற்கு" ஐந்து இடங்கள் தேர்வு செய்யப்பட்டது. அவை 1) நகராட்சி அலுவலக வளாக பகுதி 2) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 3) மாதவ நகர் 4) விண்டர்பேட்டை மற்றும் 5) பூபாலன் நகர் பூங்கா. இதில் இளைஞர் மையங்கள் தற்போது நன்கு செயல்பட்டு வருகிறது.

மேலும் முழுமை திட்டத்தில், அரக்கோணம் நகரின் உட்புறம் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் திருத்தணி சாலையில் இருந்து திருவள்ளூர் சாலைக்கு அவுசிங் போர்டு மற்றும் பெரிய ஏரி வழியாக 80 அடி அகல வழி சாலை ஒன்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நகரின் அபிவிருத்தி திட்டப்பளிகளுக்காக 15 ஆண்டிற்கான தொலைநோக்கு திட்டம் ஒன்று ரூ.4,512 லட்சத்தில் தயாரிக்கப்பட்டு மாவட்ட நிர்வாகம் மூலம் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் குறுகிய காலத்திட்டம் ரூ.237.45 இலட்சத்திற்கு கால திட்டம் ரூ.1194.55 இலட்சத்திற்கும் நீண்ட கால திட்டம் ரூ.3080 இலட்சத்திற்கும் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வருவாய் தரத்தக்க திட்டங்கள் மற்றும் பொது நல திட்டங்கள் இரண்டும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

நகரத்தின் மேற்கு பகுதியில் சோளிங்கர் சாலை அபிவிருத்தி திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

4) <u>**மன்றம்**</u>

இந்நகர மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 30.06.76ம் தேதி வரையில் தொடர்ந்து 24 ஆக இருந்து வந்தது. 23.02.86ம் தேதியில் நடைபெற்ற நகரமன்ற தேர்தலுக்கு பின்னர் இவ்வெண்ணிக்கை 28 ஆக உயர்த்தப்பட்டு, அவைகளில் மகளிர்கென 3வது வார்டு மட்டும் ஒதுக்கப்பட்டது. தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.872 நாள்.20.09.90ன் படி இந்நகராட்சியில் ஏற்கனவே இருந்த 28 வார்டுகளை மனு பிரிவினை செய்து 32 உறுப்பினர்கள் கொண்ட 32 வார்டுகளாக பிரிக்கப்பட்டு, அவற்றில் எஸ்.சி/எஸ்.டி-க்கு 6 வார்டுகளும் பெண்களுக்கு 10 வார்டுகளும் ஒதுக்கி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை 189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.20.08.96ன் படி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அதில் 12 வார்டுகள் பெண்களுக்கும் எஸ்.சி/எஸ்.டி-க்கு 9 வார்டுகளும் ஒதுக்கப்பட்டு 1996 மற்றும் 2001ல் தேர்தல் நடந்து முடிந்தது.

13.10.2006ல் இந்நகராட்சி மன்றத்துக்கான தேர்தல் நடந்தது. நகர மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் அவர்கள் விவரம்.

1. திருமதி. விஜயராணி.க. நகரமன்ற தலைவர}

2. திரு.ராஜ்குமார்.என். நகரமன்ற துணை தலைவர்

**<u>நகரமன்ற உறுப்பினர்கள்</u>**

<u>வார்டு எண்</u>

1. திருமதி.ஜோதி.ரா.
2. திரு. பாலகிருஷ்ணன்.வீ.
4. திருமதி. ஜெயந்தி. ச.
5. திரு. பார்த்தசாரதி.தீ.
6. திருமதி. ராணிகுமாரி.எஸ்.
7. திருமதி. நித்தியாஞ்சலி சுதர்சனம்
8. திருமதி. யமுனா.சே.
9. திருமதி. சுமதி.மா.
10. திரு. காமராஜ்.சி.
11. திருமதி. புவனேஸ்வரி.கோ.வ.
12. திரு. தனசேகரன்.ஜி.
13. திரு. இப்ராஉறிம்.அ.
14. திருமதி. ஜெயலட்சுமி.கா.
15. திரு. ராஜா.கி.
16. திருமதி. பிரபாவதி.ம.
17. திரு. சுரேஷ்குமார்.பு.
18. திரு. மீனாட்சி சுந்தரம்.க.
19. திரு. பாஸ்கர், வி.எம்.
20. திரு. முனுசாமி.கே.
21. திரு. சங்கர்.வி.
22. திருமதி. பாரதி.கே.
23. திருமதி. காயத்திரி.ஆர்.
24. திரு. பத்மநாபன்.ஆர்.
25. திரு. விஜய்ஆனந்த்.எஸ்.
26. திரு. பழனி.ஜெ.பி.
27. திருமதி. அவாமாபீ.அ.
28. திருமதி. செல்வி.ஆர்.
29. திரு. துரைசீனிவாசன்.டி.
30. திரு. உமாபதி.டி.
31. திரு. செல்வம்.எம்.
32. திரு. மூர்த்தி.பி.
33. திரு. பார்த்திபன்.பொன்
34. திரு. தேவதாஸ்.அ.
36. திருமதி. கலைச்செல்வி.எல்.

**<u>இந்நகரமன்ற குழுக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களும்</u>**

| | | |
|---|---|---|
| 1) நியமனக்குழு | : | திரு. வி.பாலகிருஷ்ணன், நகரமன்ற உறுப்பினர் |
| 2) ஒப்பந்தக்குழு | : | திரு.வி.எம்.பாஸ்கர், நகரமன்ற உறுப்பினர் |
| 3) வரிமேல்முறையீட்டுக்குழு | : | 1. திரு.சி.காமராஜ், நகரமன்ற உறுப்பினர்<br>2. திருமதி.கோ.வ.புவனேஸ்வரி, நகரமன்ற உறுப்பினர்<br>3. திரு. கே.ராஜா, நகரமன்ற உறுப்பினர்<br>4. திரு.டி பார்த்தசாரதி, நகரமன்ற உறுப்பினர் |

**5) <u>இயக்கம் அலுவலர்கள் : ஆணையாளர்கள் :</u>**

**திருமதி. ந. விமலா, எம்.ஏ., பி.எட்.,** 10.10.2007 முதல் தொடர்ந்து அறிக்கையாண்டில் பணிப்புரிந்து வருகின்றார்

**<u>பொறியாளர்</u> : திரு. பி.கே. ரமேஷ்,** 02.06.2008 முதல் 20.7.2009 இந்நாள் வரை பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

திரு.எஸ்.வி.ஜெயபால், 21.07.2009 முதல் 23.07.2009 வரை திரு.வி.ஜார்ஜ், 24.07.2009 முதல் 31.03.2010 வரை.

**<u>மேலாளர்</u> :** அறிக்கையாண்டில் **செல்வி. ராமேஸ்வரி,** மேலாளர் 07.11.07 முதல் தொடர்ந்து ளஅறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகிறார். (இந்நாள் வரை பணியாற்றி வருகிறார்)

**<u>6) தேர்தல்கள்</u> :**

அரக்கோணம் நகரமன்றத்தில் 30வது வார்டு மன்ற உறுப்பினராக இருந்த திரு. உமாபதி, பதவியை ராஜினாமா செய்ததை தொடர்பாக ஏற்பட்ட காலியிடத்துக்கு உள்ளாட்சி இடைதேர்தல் 07.10.2009 அன்று நடத்தப்பட்டு திரு. எஸ். சரவணன், நகரமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டு பதவி ஏற்றுக் கொண்டார்.

**<u>7) மன்ற கூட்டங்கள் :</u>**

அறிக்கையாண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்நகராட்சியின் கூட்டங்கள் நடைபெற்றன.

| | <u>மொத்த கூட்டங்கள்</u> | <u>மொத்தகூட்ட பொருள்கள்</u> |
|---|---|---|
| 1) சாதாரண கூட்டம் | 9 | 528 |
| 2) அவசரக் கூட்டம் | 4 | 5 |
| 3) ஒப்பந்தக் கூட்டம் | -- | -- |
| 4) உள்ளூர் திட்டக் குழுமம் | -- | -- |
| 5) நியமனக்குழு கூட்டம் | 2 | 10 |
| 6) சிறப்பு கூட்டம் | -- | -- |

8) **<u>அலுவலக கட்டிடம்</u>**

இந்நகராட்சி அலுவலக கட்டிடம் தமிழக அரசின் உள்ளாட்சித் துறையின் 14.10.74 தேதிய அரசாணை எண்.2211-ன் படி உத்திரவு பெற்று அரக்கோணம் சரோஜினி தெருவில் தனியார்

கட்டிடம் வாங்கி அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வந்துள்ளது. தற்போதுள்ள அலுவலகக் கட்டிடம் போதுமானதாக இல்லாததால் திருத்தணி ரோட்டில் சா்வே எண்.343/1-ல் 1.25 ஏக்கா் அரசு புறம்போக்கு நிலத்தை அலுவலகம் கட்டுவதற்கு நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு நலப்பிரிவிற்காக தற்போது வாா்டு அலுவலகம் ஒன்றும் மற்றும் ஆணையாளருக்கென குடியிருப்பு கட்டிடமும் கட்டப்பட்டு இவ்விடத்தில் அலுவலக கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டு 01.04.95 முதல் அலுவலகம் நடைபெற்று வருகிறது. மேலும் இந்நகராட்சி அலுவலக முதல் மாடியில், நகரமன்ற கூடம் ரூ.7.70 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு "டாக்டா்.பி.ஆா்.அம்பேத்காா் நகரமன்ற கூடம்" என பெயா் சூட்டப்பட்டுள்ளது.

9) இந்நகராட்சிக்கு சொந்தமாக கல் உடைத்து நோண்டி எடுக்கும் இடம் (Guarry) ஏதும் கிடையாது. எனவே, நகருக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள புளியமங்கலம் கிராமத்திலிருந்தும் திருத்தணியிலிருந்தும் ஜல்லி கற்கள் கொண்டு வரப்படுகிறது.

10) **வழக்குகள்**

அறிக்கையாண்டில் நகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்காக ரூ.1,08,300/- செலவாகியுள்ளது.

11) 2009-2010 அறிக்கை ஆண்டில், இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலக பணியாளா்களுக்கென பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியல் குடிநீா் விநியோகப் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு, உதவி கணிணி மற்றும் பொறியாளா் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஊதியம், இதர செலவினம் ரூ.3,02,000.00

| | | |
|---|---|---|
| அ) ஊதியம், சிறப்பு ஊதியம், அகவிலைப்படி, வீட்டுவாடகைபடி மருத்துவ உதவி தொகை வாகனப்படி, சலவைப்படி சோ்த்து. | : | **31,17,778.94** |
| ஆ) ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பணிக்கொடை சிறப்பு சேமநல நிதி ஓய்வூதிய நிா்வாக பங்குத் தொகை ஆகிய யாவும் சோ்த்து: | | **54,000.00** |
| ஆக மொத்தம் | : | **3,02,778.94** |

12) அரக்கோணம் நகர எல்லைக்குள் கீழ்கண்ட நெடுஞ்சாலைகள் உள்ளது. இச்சாலைகள் யாவும் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1) அரக்கோணம் | - | காஞ்சிபுரம் சாலை |
| 2) அரக்கோணம் | - | திருத்தணி சாலை |
| 3) அரக்கோணம் | - | சோளிங்கா் சாலை |
| 4) அரக்கோணம் | - | ஓச்சேரி சாலை |
| 5) அரக்கோணம் | - | திருவள்ளுா் சாலை |

நெடுஞ்சாலை துறையினரால் சுமாா் 4.8 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலை இந்நகராட்சி எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகர மன்றத்தால் பின்வரும் விவரப்படி சாலைப் பராமரிக்கப்பட்டது. இச்சாலைகளின் மொத்த நீளம் 57893 கீ.மீ

**சாலைகளின் விவரம் 2009-2010**

1. சிமெண்ட் சாலைகள் 8092 கி.மீ
2. தூசில்லா தார் சாலைகள் 38685 கி.மீ
3. ஜல்லி சாலைகள் 2659 கி.மீ
4. மண்சாலைகள் 8457 கி.மீ

**மொத்தம் 57893 கி.மீ**

மேற்படி சாலைகள் பராமரித்து வர இரண்டு நிரந்தர பாதை செப்பனிடும் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். பாதைகள் செப்பனிட திட்டப்பணிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

**13) பொது நிதி**

**சாலைப்பணிகள்.**

| | | |
|---|---|---|
| 1 | பழைய பஜார் தெரு பெரிய பாளையத்தம்மன் கோயில் தெருவில் தார்சாலை அமைத்தல் | 1.45 |
| 2 | என்.வி.என்.2வது (ம) 8வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.00 |
| 3 | நேருஜிநகர் முதல் தெருவில் தார்சாலை அமைத்தல் | 2.90 |
| 4 | மஙகளகிழார் தெருவில் தார்சாலை அமைத்தல் | 1.80 |
| 5 | மாதவ நகர் விரிவாக்கப்பகுதியில் தார்சாலை அமைத்தல் | 2.70 |
| 6 | மாதவநகர் 2 (ம)3வது தெருவில் தார்சாலை அமைத்தல் | 3.00 |
| 7 | சத்தியவாணி முத்துநகர், வேணுகோபால் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 8 | ஏ.என்.கண்டிகை முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 |
| 9 | வார்டு 3, சாஸ்திரி நகர் பகுதியில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.40 |
| 10 | வார்டு 3, சாஸ்திரி நகர் பகுதியில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.22 |
| 11 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் தெருவில் தார்சாலை அமைத்தல் | 1.50 |
| 12 | பாலசுந்தரம் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.25 |
| 13 | ஏ.பி.எம்.ர்ச் 4வது தெருவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.75 |
| 14 | டவுன்உறால் முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.60 |
| 15 | லட்சய்யனார் தெருவில் தார்சாலை அமைத்தல் | 1.50 |
| 16 | லட்சுமி நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.05 |
| 17 | உப்பரபாயைம் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.90 |
| 18 | ராஜீவ்காந்தி கர் – கணேஷ்நகர் தெருவில் தார்சாலை அமைத்தல் | 5.00 |
| 19 | சோமசுந்தரம் நகரில் 2வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.90 |

**தெருவிளக்குகள்**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 15 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 2 | வார்டு 16 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 3 | வார்டு 17 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 4 | வார்டு 26 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 5 | வார்டு 28 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 6 | வார்டு 12 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |
| 7 | வார்டு 31 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |

| | | |
|---|---|---|
| 8 | வார்டு 29 70 வார்ட்ஸ் சோடியம் வேப்பர் பல்பு பொருத்தியது | 0.50 |

**கால்வாய் (ம) கல்வெட்டு**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 25 நாவலர் நெடுஞ்செழியன் தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 3.80 |
| 2 | வார்டு 8 காலிவாரி கண்டிகை மழைநீர் கால்வாய் கடடுதல் | 1.00 |
| 3 | புதுப்பேட்டை மழைநீர்கால்வாய் கட்டுதல் | 0.40 |
| 4 | நேருஜிநகர் 4வது தெருவில் 1 (ம) 4வது குறுக்கு தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 2.00 |
| 5 | டவுனால் 3வது தெருவில் கல்வெட்டு கட்டியது | 1.10 |
| 6 | வள்ளலார் தெரு மீஞ்க்ஷர் சுப்பிரமணிய தெரு மழைநீர்கால்வாய் கட்டுதல் | 0.35 |
| 7 | வார்டு 35 பஜனை கோயில் தெரு மழைநீர்கால்வாய் கட்டுதல் | 0.50 |
| 8 | வார்டு நேருஜி நகர் 4வது தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 1.60 |
| 9 | மாதவநகர் முதல் தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 4.00 |
| 10 | ஏ.பி.எம். சர்ச் 4வது தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 0.75 |
| 11 | கிருஷ்ணாம்பேட்டை முதல் தெருவில் மழைநீர்கால்வாய் கட்டுதல் | 2.00 |
| 12 | வார்டு 24 ஏ.பி.எம்.சர்ச் கல்வெட்டு கட்டுதல் | 1.60 |
| 13 | காவனூர்ரோடு ஈஸ்வரன் கோயில் தெருவில் கல்வெட்டு கட்டுதல் | 0.45 |
| 14 | சோமசுந்தரம் நகரில் கல்வெட்டு கட்டுதல் | |

**பொது நிதி**

| | | |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு பராமரிப்பு பணி | 0.125 |
| 2 | கணினி அறை பராமரிப்பு பணிகள் | 0.455 |
| 3 | புதிய பஸ்நிலையத்தில் பயணியர் இருக்கைகள் பழுது பார்த்தது | 0.25 |
| 4 | உள்ளாட்சி தினவிழா கொண்டாடியது | 0.50 |
| 5 | 50 கே.வி.ஜெனரேட்டர் பழுது பார்த்தது | 0.96 |

**குடிநீர் நிதி பணிகள்**

| | | |
|---|---|---|
| 1 | பழைய பஜார் தெரு – பெரியபாளையத்தம்மன் கோயில் தெருவில் குடிநீர் நினியோகப் பைப் லைன் அமைத்தல் | 0.25 |
| 2 | மோட்டார் பைப்பு பழுது நீக்கம் செய்தல் | 0.60 |
| 3 | கல்லாறு ம) தககோம் தலைமை நீரேற்று நிலையத்தில் கன்ரோல் போர்டு அமைத்தல் | 0.53 |
| 4 | நகரப்பகுதியில் குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.00 |
| 5 | நகரப்பகுதியில் குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.00 |
| 6 | நகரப்பகுதியில் குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.00 |
| 7 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் 450 எம்.எம்.dia CI சப்ளை செய்தது | 0.74 |
| 8 | நகரத்திலுள்ள திறந்தவெளி கிணறுகள் சீர் செய்தது | 2.00 |
| 9 | மினிபவர் பம்ப் பராமரிப்பு பணிகள் செய்தது | 1.50 |
| 10 | போனபிளாக் 7.50 எச்.பி.மோட்டார் சப்ளை செய்தது | 0.35 |
| 11 | அலுவலக வளாகத்தில் குடிநீர் பைப்லைன் அமைத்தது | 0.70 |
| 12 | வார்டு 30 குருசாமி தெருவில் குடிநீர் பைப்லைன் அமைத்தது | 0.50 |
| 13 | தக்கோலம் தலைமை நீரேற்ற நிலையத்தில் 20 எச்.பி.மோட்டார் பழுது பார்த்தது | 0.34 |
| 14 | அலுவலக வளாகத்திலுள்ள பம்பு ரூம் பழுது பார்த்தல் | 0.85 |
| 15 | அலுவலக வளாகத்திலுள்ள OHT பம்ப் ரூமிலுள்ள 7.5 எச்.பி.மோட்டார் பழுது பார்த்தல் | 0.14 |
| 16 | டில்லியப்பன் தெருவில் 10 mm & 140mm PVC பைப் அமைத்தது | 0.40 |

| | | |
|---|---|---|
| 17 | நகர பகுதியில் வால்பு தொட்டிகள கட்டியது | 1.50 |
| 18 | குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணி செயத்து | 1.00 |
| 19 | ஆழ்துளை குழாய கணறுகள் பிளஷிங செய்து சுத்தம் படுத்தியது | 0.64 |
| 20 | புதுப்பேட்டை டி.பி.ரோடு குடிநீர் பைப்லைன் அமைத்தது | 1.70 |
| 21 | வார்டு 23 ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்தது | 0.50 |
| 22 | குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணி செய்தது | 1.50 |

**பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 19 ஒத்தவாடை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 2 | டவுனால் 7வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 3 | அருணாசலம் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 4 | மதுரைபிள்ளை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |

**SJSRY திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1 | ராஜுவ்காந்தி முதல் காவனூர் ரோடு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 |
| 2 | டவுனால் 7வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.00 |

## Infrastructure O & M Cap Filling:

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் – அரக்கோணம் நெடுஞ்சாலையில் குடிநீர் வினியோக பிரதானப் பைப்லைன் அமைத்தல். | 26.00 |

**UIDSSMT:**

| | | |
|---|---|---|
| 1. | அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம் | 722.00 |

**E.T.**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 19 கிழக்கு ஒப்பணக்கார தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.36 |
| 2 | பூக்கார நடராஜன் தெரு தார் சாலை அமைத்தல் | 3.30 |
| 3 | வார்டு 2 மாதவநகர் தெரு தார் சாலை அமைத்தல் | 3.80 |
| 4 | பழைய பஜார் தெரு தார் சாலை அமைத்தல் | 0.70 |
| 5 | ராஜேந்திர கிரிசிங தெரு தார் சாலை அமைத்தல் | 3.00 |
| 6 | டவுனால் 3வது தெரு தார் சாலை அமைத்தல் | 1.35 |

**SSFC**

| | | |
|---|---|---|
| 1 | ராஜுவ்காந்தி நகர் உரக்கிடங்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 7.00 |
| 2 | ராஜுவ்காந்தி நகர் உரக்கிடங்கு பம்ப்ரூம் வாச்மேன் | 5.00 |

**சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 17 ரேஷன் கடை கட்டியது | 2.50 |
| 2 | டவுனால் 7வது தெரு மழைநீர் கால்வாய் கட்டியது | 7.00 |
| 3 | வார்டு 23 சத்துணவு கூடம் கட்டியது | 2.50 |
| 4 | வார்டு 30 குருசாமி தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 5 | மதுரை பிள்ளை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 |
| 6 | காலிவாரி கண்டிகை (மையானம் சுற்று சுவர் அமைத்தல் | 4.00 |
| 7 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எம்.243 பக்கம் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 8 | டில்லியப்பன் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 9 | கிருபில்ஸ்பேடடை முனுசாமி தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 |

**XIIth Finance**

| | | |
|---|---|---|
| 1. | கல்லாறு நீரேற்று நிலையத்தில் தார்சாலை அமைத்தல் | 3.85 |
| 2 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் தார்சாலை அமைத்தல் | 2.90 |

**Part-II**

| | | |
|---|---|---|
| 1. | நவீன ஆடு அடிக்கும் தொட்டி | 20.00 |

**Elementary Education:**

| | | |
|---|---|---|
| 1 | ஏ.பி.எம்.சர்ச் நகராட்சி பள்ளி பராமரிப்பு பணி செய்தல் | 1.25 |
| 2 | காந்தி நகர் நகராட்சி பள்ளி பராமரிப்பு பணி செய்தல் | 1.50 |
| 3 | நேருஜி நகர் நகராட்சி பள்ளி சுற்றுச்சுவர் கட்டுதல் | 3.00 |
| 4 | ஏ.பி.எம்.சர்ச் நகராட்சி பள்ளி பராமரிப்பு செய்தல் | 2.00 |
| 5 | காலிவாரி கண்டிகை நகராட்சி பள்ளி பள்ளிக்கட்டிடம் கட்டுதல் | 5.00 |

**14.** **படைவீரர் கொடி நாள் :** படைவீரர் கொடி நாள் வசூலுக்கென 2009-2010ம் ஆண்டிற்கான இலக்கீடு ரூ.45,000/- ஆகும்.

**மரம் நடுதல் (பசுமை வளைய திட்டம்)**

**15.** சுற்றுச்சுழல் மாசுபடாமல் தடுக்கவும், நகரத்தை பசுமை மயமாக்கவும் கருதி இந்நகராட்சியில் மரக்கன்றுகள், நடும் பணிகள் அறிக்கை ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொண்டுவளம் கொண்ட பின்வரும் தனியார் துறை நிறுவனங்களின் உதவியுடன் மேற்படி பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி நகர் முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

1. எம்.ஆர்.எப்.கம்பெனி, இச்சிபுத்தூர்
2. பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சோளிங்கர்
3. லார்சன் & ட்யூப்ரோ லிமிடேட்
4. ராம்கோ கம்பெனி, அரக்கோணம்

வனத்துறையினரிடமிருந்து மரக்கன்றுகளைப் பெற்று, அவற்றை நட்டு பராமரிக்கும் பணிகளை அரக்கோணம் டாசா தொண்டு நிறுவனம் செய்துள்ளது.

**இளைஞர் விளையாட்டு (மற்றும்) மனமகிழ்மன்றம்.**

**16.** இளைஞர்களிடம் விளையாட்டு உணர்வை மேம்படுத்தவும், மனமகிழ்வுக்கெனவும், இந்நகராட்சியில் பின்வரும் இடங்களில் இளைஞர் விளையாட்டு (மற்றும்) மனமகிழ் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1) நகராட்சி அலுவலக வளாகம்
2) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி
3) வின்டர்பேட்டை எம்.ஏ.ஜெயின் பள்ளி அருகில்

4) தர்மராஜா கோயில் மைதானம்
5) சோமசுந்தரம் நகர்

மேற்படி விளையாட்டு மையங்கள் ஒவ்வொன்றுக்கும், தலா ரூ.25,000/- மதிப்புள்ள விளையாட்டு உபகரண கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இளைஞர்கள் விளையாட்டுகளில் நன்கு பயிற்சி பெற்று முன்னேறிட பல நல்ல ஆக்க பூர்வமான வழிமுறைகள், சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

17. <u>பொறிகளும், கருவிகளும்</u>

அறிக்கை ஆண்டில் எரிந்த தெருவிளக்குகளின் விவரம் 2009-2010

| | | | |
|---|---|---|---|
| 1. | சோடியம் ஆவி விளக்குகள் | : | **331** |
| 2. | பாதரச ஆவி விளக்குகள் | : | **15** |
| 3. | குழல் விளக்குகள் | : | **1509** |
| 4. | உயர்மின் கோபுர விளக்கு | : | **5** |
| | **மொத்தம்** | | **1860** |

அறிக்கையாண்டில் விளக்குகளுக்காக ரூ.40,48,800/- செலவிடப்பட்டது. தெருவிளக்குகள் 15.8.1989 முதல் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

18) <u>கல்வி வசதிகள்:</u>

அரக்கோணம் நகராட்சியின்கீழ் 7 ஆரம்ப பள்ளிகளும் 4 நடுநிலைப் ஆரம்ப பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் உருது ஆரம்ப பள்ளி ஒன்றாகும். நகராட்சியின் கீழ் உயர்நிலைப்பள்ளிகள் எதும் இல்லை. கட்டாய துவக்கப்பள்ளி அமுலில் உள்ளது. ஏழை மாணவ மாணவியர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் மதிய உணவு வழங்கப்படுகிறது. போதுமான இடவசதி 4 பள்ளிகளை தவிர இதர பள்ளிகளில் தற்போதுள்ள இடவசதி போதுமானதாகும். 11 நகராட்சி பள்ளிகளில் 10 பள்ளிகள் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

<u>19) சிப்பந்திகள்:</u>

31.03.90 முதல் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் மாற்றப்பட்டு உதவி கல்வி அலுவலரின் கீழ்பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு அரசால் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

20) <u>இடவசதியும், தளவாடங்களும்:</u>

நகராட்சி ஆரம்ப பள்ளிகளில் 10 சொந்தக்கட்டிடங்களிலும் 1 வாடகை கட்டிடங்களிலும் இயங்கி வந்தன. வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.48,000/- வாடகையாக கொடுக்கப்பட்டது. நகராட்சி பள்ளிகளில் 4 பள்ளிகளை தவிர இதர பள்ளிகளுக்கு

இடவசதி போதுமானதாகும் நிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது ஒவ்வொரு பள்ளிகளுக்கு இட வசதிக்காக தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

21) <u>தொடக்க கல்வி:</u>

ஆரம்ப பள்ளிகளின் கணக்கின்கீழ் மொத்த செலவு அறிக்கையாண்டில் ரூ..10,98,860/-

22) <u>திறமை, இடவசதி, தளவாட வசதித் நிதி வசதி:</u>

இந்நகராட்சியால் மேல்நிலை பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை.

23) <u>தனிப்பள்ளிகள், பொதுநூல் நிலையங்கள்</u>:

அறிக்கையாண்டில் இரண்டு வகை கல்வி நிலையங்கள் தவிர, தென் பிராந்திய இரயில்வே நிர்வாகத்தினாரால் பொறியியல் பள்ளி ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் நூல் நிலையம் ஏதும் நகராட்சியால் நடத்தப்படவில்லை. கிளை நூல் நிலையம் ஒன்று வேலூர் உள்ளாட்சி நூல் நிலையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

24) <u>புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம்:</u>

இந்நகராட்சியில் 11 பள்ளிகளில் சத்துணவு மையங்களும் ஒவ்வொரு மையத்திற்கும் 1 அமைப்பாளரும் ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளரும் பணி புரிகின்றார்கள். 11 பள்ளி சத்துணவு மையங்கட்கென ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் பணி புரிகின்றார். 11 பள்ளி சத்துணவு மையங்களிலும் நாள் ஒன்றுக்கு பள்ளிகளுக்கு சத்துணவு பரிமாறப்படுகிறது. அதன் தினசரி பயனாளிகள் 850 ஆகும். மொத்தம் 11 அமைப்பாளர்களும், 11 சமையலரும், 11 சமையல் உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். காலிவாரி கண்டிகை நகராட்சி ஆரம்ப பள்ளி சத்துணவு அமைப்பாளர் பணி பூர்த்தி செய்யப்பட்டது.

பள்ளி மையங்களில் பயனாளிகளுக்கு திங்கள் தோறும் மத்தீய உணவுடன் உருளை கிழங்கும், புதன்கிழமை தோறும் பச்சைபயிறும், பிரதி வெள்ளி கிழமை தோறும், கொண்டை கடலையும், மூட்டையும் சேர்த்து வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மையத்திற்கும் பார்வையாளர் நியமிக்கப்பட்டு மாதத்திற்கு குறைந்தது ஒருமுறை ஆய்வுமேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறது. மையங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு 2009-2010 ஆண்டில் பெறப்பட்ட நிதியும் செலவிடப்பட்ட தொகையும் விவரம் வருமாறு.

| | <u>பெறப்பட்ட மான்யம்</u> | <u>செலவினம்</u> |
|---|---|---|
| மான்யம் | ரூ.10,20,104.00 | ரூ.8,72,320.00 |

2009-2010ம் ஆண்டிற்கு மான்யம் தொகை ரூ. 10,20,104.00 பெறப்பட்டது. செலவினம் தொகை ரூ.8,72,320.00 செலவிடப்பட்டது.

**25) மருத்துவம்:**

அரசினரால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ மனையில் பணியாளர்களுக்கு 100 படுக்கை வசதிகள் உள்ளன. பெண்களையும் குழந்தைகளையும் கவனிக்க தனி பெண் மருத்துவர் உள்ளார். இரயில்வே துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கென ரயில்வே மருத்துவமனை ஒன்று தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் நல அதிகாரி பதவி ஏதும் இல்லை. ஒரு துப்புரவு அலுவலர் மற்றும் 4 துப்புரவு ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**26) பிறப்பு, இறப்பு மகப்பேறு உதவியும்:**

அறிக்கை ஆண்டில் மொத்த பிறப்புகளின் எண்ணிக்கை 1453 ஆகும். சென்ற ஆண்டில் 1627 ஆகும். நகராட்சியில் எல்லைக்குள் பிறப்புகளை கவனிக்க 3 மகப்பேறு உதவியாளார்கள் பணியாற்றினர். அறிக்கை ஆண்டு முழுவதும் மூன்று மகப்பேறு ஆயாக்கள் பணியிடம் காலியாக உள்ளது. மொத்த பிறப்புகளில் நகராட்சி மகப்பேறு உதவியாளர்களால் கவனிக்கப்பட்ட பிறப்புகள் 43 ஆகும். கடந்த ஆண்டு 119. அறிக்கையாண்டில் பதிவான இறப்பு எண்ணிக்கை 468 ஆகும். கடந்த ஆண்டு 479 ஆகும்.

**27) பல்வகை நோய்களும் அதனால் ஏற்பட்ட இழப்புகள் விவரம் கீழ்வருமாறு:**

| | 2003-2004 | 2004-2005 | 2008-2009 | 2009-2010 |
|---|---|---|---|---|
| 1. டைபாயிட் | -- | -- | -- | -- |
| 2. இதர காய்ச்சல்கள் | -- | -- | -- | -- |
| 3. வயிற்றுப்போக்கு | -- | -- | -- | -- |
| 4. சீதபேதி போக்கு | -- | -- | -- | -- |
| 5. காசநோய் | 16 | 11 | -- | -- |
| 6. இதர நோய் காரணங்கள் | 432 | 412 | 479 | 468 |

அறிக்கையாண்டில் துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் பிறப்பு இறப்பு பதிவுகளும் இதர வேலைகளும் செய்யப்பட்டது.

அறிக்கையாண்டில் அம்மை ஏதும் குத்தப்படவில்லை. இந்நோய்கள் பரவாமல் இருக்க தடுப்பு ஊசிகள் அவ்வப்போது போடப்பட்டது. அரசினரால் அனுமதிக்கப்பட்டு கொசு ஒழிப்பு திட்டம் திருப்திகரமாக இயங்கி வருகிறது. அத்திட்டத்தை அமுல் படுத்த ஒரு துப்புரவு ஆய்வர் ஒரு களப்பணி உதவியாளர் பணிபுரிந்து வந்தார். கொசு ஒழிப்பு திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் மான்யம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

**28) துப்புரவு பாதுகாப்பு:**

அறிக்கையாண்டில் நகரின் எல்லா வீதிகளையும், சந்துகளையும், தெருக்கூட்டும் துப்புரவு பணியாளர்களை கொண்டு தெருக்கூட்டி குப்பை லாரி மூலம் குப்பைகளை அகற்றி சுத்தம்

செய்யப்பட்டது. நகராட்சி வண்டிகள் மூலம் அன்றாடம் சேகரிக்கப்பட்டு வரும் தெரு குப்பையும் மக்கு எரு தயாரிக்க உரகிடங்கில் சேகரிக்கப்பட்டது. நகரிலுள்ள 36 வார்டுகளிலும் அனைத்து துப்புரவு பணியாளர்களையும் கொண்டு " Mass Cleaning Program" நடைமுறைப் படுத்தப்பட்டது. மாலை வேலைகளிலும் துப்புரவு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**29) <u>மலஅறை வசதிகள்:</u>**

மொத்தத்தில் 12609 கட்டிடங்களில் 11298 கட்டிடங்கள் குடியிருப்புக்காக உபயோகிக்கப்பட்டு வந்தன. அவைகளில் 10767 கட்டிடங்களில் மல அறைகள் வசதிகள் இருந்தன. மற்ற பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு சுய உதவி குழுக்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது.

**30) <u>திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் கையாளுதல்</u>**

அரக்கோணம் நகரம் 9.5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இது முதல் நிலை நகராட்சியாகும். 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை 78,686 ஆகும். தற்போது ஜனத்தொகை 80,752.

இந்நகராட்சி 36 வார்டுகளைக் கொண்டது ஆகும். இதில் 36 வார்டுகளில் வீடு, வீடாச்சென்று குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று 11 ஆட்டோ டிப்பர் மற்றும் 40 தள்ளு வண்டிகளில் சேகரிக்கும் பணி நடைப்பெற்று வருகிறது. 60 இடங்கள் குப்பை சேகரிக்கும் மையமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. வீடு வீடாக சேகரிக்கும் குப்பைகளை மையங்களில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து நான்கு லாரிகளில் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

அரக்கோணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்துவதில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரமன்றம் சாதாரண கூட்டம் 06.07.05 அன்று நடைபெற்ற கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை தனியார் மயம் திட்டம் ரத்து செய்ய ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இதை பற்றி பின்னர் முடிவு செய்ய மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை தனியார் மயம் திட்டம் செயல்படுத்த மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் உரக்கிடங்கு 1.82 ஏக்கரில் உள்ளது. இது இந்நகராட்சிக்கு போதுமானதாக இல்லாததால், நகராட்சிக்கு சொந்தமான காவனூர் குடிசை மேம்பாட்டு திட்டத்துக்காக வாங்கப்பட்ட நிலத்தில் 10 ஏக்கர் நிலம் நவீன திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு "நவீன உரக்கிடங்கு " அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள அனைத்து கடை உரிமையாளர்களுக்கும், அனைத்து வீடுகளுக்கும், குப்பைகளை வீதியில் போடக்கூடாது என்று அறிவிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த " அழகு மிகு அரக்கோணம்" என்ற திட்டம், 02.06.04 முதல் தொடங்கப்பட்டு தினசரி காலையிலும், பிற்பகலிலும் ஒவ்வொரு வார்டிலும் சிறப்பு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது.

இந்நகராட்சி பகுதிகளில் அதிகமாக சேரும் பிளாஸ்டிக்குகளை வியாபாரிகள், பொது மக்கள் கழிவு பிளாஸ்டிக்குகளை ஒரு பெரிய கண்டெய்னரில் வைத்து அதனை எடுத்துச் செல்ல நகராட்சி லாரி வரும் பொழுது அதை தனியாக போட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மருத்துவமனையில் சேரும் மக்கும் குப்பைகள் மற்றும் மருத்துவ சம்மந்தப்பட்ட மக்கா குப்பைகளை தனியாக சேமித்து கிருமி நாசினி தெளித்து மருத்துவமனை பொறுப்பாளர்களை கொண்டு அழிக்கப்பட்டு வருகிறது.

குப்பையில்லா நகரம் கோயிலுக்கு சமம் என்பதை பொது மக்கள் அனைவரும் உணரவும், உணர்ந்து செயல்படவும் தகுந்த வழிகளை செய்து, திடக்கழிவு மேலாண்மை திட்டம் (மற்றும்) கையாளுதல் சிறந்த முறையில் செயல்பட தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**31) <u>உணவு மாதிரி விவரம்:</u>**

இந்நகராட்சியில் உணவு மாதிரிகள் எடுக்க பயிற்சி உணவு ஆய்வாளர்கள் எவரும் இல்லை. தற்சமயம் உள்ள துப்புரவு ஆய்வாளர்கள் தகுதியான ஒருவருக்கு உணவு மாதிரி பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**32) <u>அபாயகரமானதும் அருவருக்கதக்கதுமான வணிகம்</u>:**

அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழிற்சாலைகளின்கீழ் எல்லா வியாபரிகளுக்கும் உரிமையாணை இந்த ஆண்டில் வழங்கப்பட்டது. ஆணையராலும், துப்புரவு ஆய்வராலும், மேற்படி தொழில்கள் நடைபெறும் இடங்கள் பார்வையிட்டு உரிமையாணை கொடுக்கப்பட்டு தகுதியுள்ள எல்லா வியாபாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. பார்வையிடும் போது நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை கடுமையாக அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருத்திய உபவிதிகளின்படி உரிமம் கட்டணம், வசூல் செய்யப்பட்டது. அறிக்கையாண்டில், அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான வணிகத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரூ..1,99,327.00 ஆகும்.

**33) <u>சந்தை கடைகள்</u>:**

விளம்பரப்படுத்தப்பட்ட சந்தைகள், விழாக்கள் இந்நகரில் ஏதுமில்லை. அறிக்கையாண்டில் சந்தைகளும் முக்கிய விழாக்கள் ஏதும் நடைப்பெறவில்லை. பிரதி மாதம் ரயில்வே தொழிலாளர் ஊதிய நாளன்று ரயில்வே பொறியியல் பணிமனை அருகில் சிறிய மாதாந்திர சந்தை நடத்தப்படுகிறது. இங்கிருந்து சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருத்தணியில் ஆடிகிருத்திகை விழா முன்னிட்டு பக்தர்களுக்கு இந்நகரில் சிறப்பு சுகாதார வசதிகள் வழக்கம் போல் இந்நகராட்சி மூலம் அமைக்கப்பட்டது.

**34) <u>தண்ணீர் வழங்குதல்:</u>**

**<u>குழாய்-பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்:</u>**

பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம், அமுலில் உள்ளது. இதற்கென இந்நகரத்திற்கு 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கல்லாறு படுகையில் 1938-ல் அமையப்பெற்றுள்ள தலைமை நீரேற்று நிலையம் அறிக்கையாண்டில் பராமரிக்கப்பட்டு வந்தது. மொத்தம் 13.5 குதிரை வேக ஓட்டமுள்ள மின்சார மோட்டார்களை கொண்டு தண்ணீர் இரைக்கப்பட்டு "7" குழாய் மூலமாக நகரின் தென் பகுதியில் கட்டப்பட்டுள்ள நீர்தேக்கத்தொட்டியில் நீர் சேகரிக்கப்பட்டு வருகிறது. நீர் தேக்க தொட்டிகளின் கொள்ளளவு 50,000 காலன் ஆகும். அரக்கோணம் நகராட்சிக்கு தமிழ்நாடு எஃகு தொழிற்சாலைக்கும், அரக்கோணம் ரயில்வே நிலயத்திற்கும் சேர்ந்து ரூ.48.33 லட்சம், செலவில் கேசாவரம் கூட்டு குடிநீர் திட்டம் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பில் இருந்து கேசாவரம் குடிநீர் திட்டம் நகராட்சி தன்வசம் 2001-ம் ஆண்டு மே மாதம் முதல் மேற்கொண்டது.

கேசாவரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 125 கு.ச. கொண்ட மோட்டார் மூலம் 18 அங்குல பிரதான குழாய் மூலம் நீர் ஏற்றப்பட்டு ஜூப்ளி சாலையில் உள்ள 5,25,000 கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத்தொட்டியில் சேகரிக்கப்பட்டு குடிநீர் தண்ணீர் நகரின் வடக்கு மற்றும் நகரின் எல்லா பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. கல்லாறு நீரேற்றும் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் 7.5. இலட்சம் லிட்டர் குடிநீரும் கேசாவரம் திட்டத்தின் மூலம் கிடைக்குப் பெறும் 42.5. இலட்சம் லிட்டர் குடிநீரும் சேர்ந்து ஆக மொத்தம் 50 லட்சம் லிட்டர் தண்ணீர் குழாயின் மூலம் பொது மக்களுக்கு அன்றாடம் வழங்கப்பட்டு வருகிறது. அரக்கோணம் நகராட்சிக்கு மட்டும் இத்திட்டத்தின் பங்கு தொகை ரூ.22,82,400/- ஆகும். அறிக்கையாண்டில் நகரில் 146 பொது குழாய்களும் 8054 வீட்டு குழாய் இணைப்புகளும் இருக்கின்றன. தினமும் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 51 LPCD அறிக்கையாண்டில் அரசினர் பரிசோதகரால் மாதிரி தண்ணீர் எடுக்கப்பட்டு தண்ணீர் திருப்திகரம் என்ற சான்று வழங்கப்பட்டது. அறிக்கையாண்டில் வீட்டு குழாய் இணைப்பு மூலமாக ரூ.24.45 வருவாய் பெறப்பட்டது. தலைமை பொறியாளர் மூலம் இத்திட்டத்தை அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் முழுவதும் முடிக்கப்பட்டு நீர்வழங்கும் பராமரிப்பு பொறுப்பு மட்டும் 1.2.74 முதல் பொறுப்பில் உள்ளது.

**<u>கேசாவரம் குடிநீர் திட்டம்:</u>**

இத்திட்டம் 1970 முதலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைமுறை படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் பயனாளிகள் நால்வர் ஆவர்.

1. அரக்கோணம் நகராட்சி
2. தென்னக இரயில்வே, அரக்கோணம்

இத்திட்டத்தின் அத்தியாவசியம், கருதியும், பெருகி வரும், தண்ணீர் தேவையினை கருத்தில் கொண்டு இந்நகராட்சியின் நிர்வாக நலன்களை கருதியும் கூட்டு குடிநீர் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து முழு பராமரிப்புகளையும் கோரி 21.07.99 தேதிய நகரமன்ற தீர்மான எண்.107-யில், நிறைவேற்றப்பட்டு பிரேரணைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இதன் பேரில் தமிழக அரசினது அரசாணை எண்.159 நாள் 13.3.2001 ந.நி-3 (2) துறையின்படி கேசாவரம் கூட்டு குடிநீர் திட்டக் குழு பராமரிப்பினையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து இந்நகராட்சியே முற்றிலுமாக ஏற்றுக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி 14.05.2001 அன்று இத்திட்டத்தினை நகராட்சியே ஏற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

35) <u>சாக்கடை:</u>

நகரில் ஒருங்கிணைந்த சேர்க்கப்பட்ட சாக்கடை திட்டம் அமுலில் இல்லை. முக்கிய வீதிகளில், பலவற்,றில் திறந்த சாக்கடைகள் உள்ளன. சாக்கடை மழைநீர் வடிகால் வாய்காலின் மொத்த நீளம் 18.60 கிலோ மீட்டர் ஆகும். சாக்கடையில்லா தெருக்களில் கழிவு நீர் ஏரிகளில் சேமிக்கப்பட்டு நகராட்சி கழிவுநீர் வண்டிகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பாதாளச்சாக்கடை திட்டத்தில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் செயல்படுத்த இயலவில்லை.

36) <u>பொதுநல பாதுகாப்பு (பலவகைப்பட்டவை):</u>

அ) நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் உள்ளது

ஆ) சுடுகாடு மையானம் நகரின் மத்தியில் உள்ளது

இ) தெருகூட்டுவோருக்கும், மலமெடுப்போருக்கும் குடியிருப்பு வசதி எதுவுமில்லை. தகுதியான இடம் கிடைத்தபின் குடியிருப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37) <u>வருவாய் தக்க முயற்சிகள்:</u>

ஒரு நாளங்காடி இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாத சந்தை பெருந்து நிலையம் ஒன்றும் மற்றும் கிடங்குகளும் இந்,நகராட்சியால் அறிக்கையாண்டில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி மூலம் கீழ்கண்ட இனங்கள் ஆண்டு ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வருடம் | நாளங்காடி | பேருந்து நிலையம் | மாத சந்தை | ஆடு, மாடு அடிக்கும் தொட்டி |
|---|---|---|---|---|---|
| 1 | 2007-2008 | ரூ.13,29,277.00 | ரூ.5,80,984.00 | ரூ.30,400.00 | ரூ.20,250.00 |
| 2 | 2008-2009 | ரூ.14,10,674.00 | ரூ.6,20,000.00 | ரூ.45,750.00 | ரூ.23,200.00 |
| 3 | 2009-2010 | ரூ.15,07,000.00 | ரூ.6,21,800.00 | ரூ.59,500.00 | ரூ.27,300.00 |

38) <u>நாளங்காடி:</u>

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் நாளங்காடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட நபருக்கு சொந்தமான நாளங்காடியோ, வார அங்காடியோ இல்லை. இந்நக்ராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நாளங்காடியில் உள்ள கடைகளுக்கும் வாடகை தினசரி

நகராட்சியால் வசூல் செய்யப்பட்டது. நகராட்சியாலோ அல்லது தனிப்பட்டவர்களாகவோ, வண்டி நிலையம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ரயில்வே நிலையத்திற்கு அருகில் ரயில்வேக்கு சொந்தமான இடத்தில் ஓர் வண்டி நிலையம் மற்றும் மிதிவண்டிகள் நிறுத்தும் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

**<u>பேருந்து நிலையம்</u> :**

இந்நகரில் பேருந்து நிலையம் நாளொன்றுக்கு சுமார் 147 பேருந்துகள் உபயோகிக்கும் வண்ணம் நடத்தப்பட்டு வந்தது. பேருந்து நிலையம் குத்தகைக்கு விடப்பட்டு இதன்மூலம் ரூ.6,21,000.00 வருவாய் கிடைத்தது. கடந்த ஆண்டு ரூ.6,20,000/- கிடைத்தது. தற்போது ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் தென்னக ரயில்வே பொறியியல் பணிமனைக்கு அருகில் உள்ள ரயில்வே இடத்தில் நான்கு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு 26.02.1998 முதல் பயனுக்கு விடப்பட்டது.

**<u>ஆடு, மாட்டு இறைச்சி தொட்டிகள்:</u>**

அரக்கோணம் நகரில் ஆடுவதை செய்வதற்கும், மாடுவதை செய்வதற்கும் தனித்தனியே தொட்டிகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மேற்படி தொட்டிகள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் ரூ.27,300.00 வருமானம் கிடைத்தது. கால்நடை மருத்துவ அதிகாரி மூலம் அன்றாடம் பரிசோதனை செய்துவருகின்றார்.

**39) <u>இயந்திர சாலைகளும், தொழிற்சாலைகளும்:</u>**

இந்நகரில் தென்னிந்திய பொறியியல் தொழிற்கூடம் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ், சிமெண்ட் தொழிற்கூடம், தவிர தொழிற்சாலையோ அல்லது சக தொழிற்சாலையோ இல்லை. தமிழ்நாடு அரசின் தொழிற்பேட்டையில் தனிப்பட்ட நபருக்குரிய தொழிற்சாலைகள் நடத்தபபட்டு வருகினறன. ராம்கோ நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் சிமெண்ட் ஆலை, மற்றும் உதயம் திரையரங்கம் இவைகள் நகராட்சியின எல்லையை சேர்ந்தாற்போல் உள்ளதால், அவைகளை நகராட்சி எல்லைக்குள் சேர்க்கும் திட்டம், நடவடிக்கையில் உள்ளது.

**40) <u>மரம் நடுதலும், பூங்காக்களும்:</u>**

இங்கு மரம் நடுவதற்கு வளர் நிலம் கெட்டியாகவும், உலர்ந்தும் இருப்பதால் வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. மரம் நடுவதற்கும் அதனை பராமரிப்பதற்கும் பிரத்தியோகமாக சிப்பந்திகள் இல்லை. இந்நகராட்சியில் காந்தி பூங்கா, வேதாச்சசலம் பூங்கா என இரண்டு பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பூங்காக்கள் மூலம் வருவாய் ஏதும் இல்லை. அதற்கான செலவு பொது நிதியிலிருந்து செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பராமரிப்பு செலவு ஏதும் செய்யப்படவில்லை.

41) **வருவாய் கணக்கு:**

**சொத்துவரி :** அறிக்கை ஆண்டில் சொத்துவரி 09-10ல் கீழ்க்கண்ட விகிதாசாரப்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**09-10 அரையாண்டு விகிதம்**

| | |
|---|---|
| 1. பொதுவரி | 10.50% |
| 2. நூலக வரி | 1.25% |
| 3. தண்ணீர் / சாக்கடை வரி | 2.00% |
| 4. கல்வி வரி | 2.50% |
| | **16.25%** |

இந்நகராட்சியில் வருவாய் பெருக்க வேண்டும் என்பது இன்றியமையாததாக உள்ளது. புதியதாக கட்டப்பட்ட வீடுகளுக்கு அல்லது கூடுதல் கட்டிடம் கட்டிய வீடுகளுக்கு வழக்கம் போல் வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. சொத்து வரியின் கீழ் அறிக்கை ஆண்டில் மொத்த வருவாய் ரூ.111.61 லட்சம் ஆகும்.

**2) நில பிரிவு 81(3):**

கீழ்க்கண்ட விகிதப்பபடி காலிமனைக்கு வரிவிதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**09-10 அரையாண்டு விகிதம்**

| | |
|---|---|
| 1. பொதுவரி | 10.50% |
| 2. நூலக வரி | 1.25% |
| 3. தண்ணீர் / சாக்கடை வரி | 2.00% |
| 4. கல்வி வரி | 2.50% |
| | **16.25%** |

**தொழில்வரி, புதிய தொழில்வரி விகிதம்:**

தொழில்வரி 2009-2010 இரண்டாம் அரையாண்டு 1.10.2008 முதல் 25% உயர்வு செய்து நடைமுறை படுத்த நகர மன்றம் தனது தீர்மான எண்.0718 நாள் 28.08.08-ல் தீர்மானம் நிறைவேற்றியது.

| சராசரி அரையாண்டு வருமானம் | அரையாண்டு வரி |
|---|---|
| 1. 21,000 வரை | இல்லை |
| 2. 21,001 முதல் 30,000 | ரூ. 94/- |
| 3. 30,001 முதல் 45,000 | 235/- |
| 4. 45,001 முதல் 60,000 | 469/- |
| 5. 60,001 முதல் 75,000 | 703/- |
| 6. 75,001 அதற்கு மேல் | 938/- |

**வரிவிதிப்பு:**

அறிக்கை ஆண்டில் 441 கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 302 கட்டிடங்களுக்கு வரிவிதிக்கப்பட்ட மொத்தம் 12550-ஆக இருந்தது. இதன்மூலம் தொகை ரூ.110.07 லட்சம் வசூலிக்கப்பட்டு நிலுவையாக உள்ள தொகை ரூ.83.72 லட்சம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

**42) கேட்பு, வசூல், பாக்கி**

2009-2010 அறிக்கையாண்டில் வரியினங்களில் கீழும் வரி இல்லாத இனங்களின் கீழும் கேட்பு வசூல் பாக்கி முதலியன கீழ்வருமாறு (லட்சத்தில்)

| வ.எண் | இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | வரியினம் | 193.79 | 110.07 | 83.72 |
| 2. | வரியில்லா இனம் | 28.07 | 13.34 | 14.73 |
| 3. | குடிநீர் கட்டணம் | 86.65 | 50.56 | 36.09 |

நிலுவையில் உள்ள வரியினங்கள் வசூல் செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**43) வழக்கு பதிவேடு:**

இந்நகராட்சியில் 2009-2010-ம் அறிக்கையாண்டில் இறுதியில் 31 வழக்குகள் நிலுவையில் உள்ளன. வழக்குகளை விரைந்து முடித்திடுமாறு நகராட்சி வழக்கறிஞரை கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றம் (மற்றும்) சென்னை உயர்நீதி மன்றத்திலும் சமபந்தப்பட்ட வழக்கறிஞருக்கும், இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

**44) தணிக்கை:**

அறிக்கை ஆண்டில் துவக்கத்தில் 1310 தணிக்கை தடைகள் நிலுவையாக இருந்தது 2006-2007ம் ஆண்டின் தணிக்கை அறிக்கை பெறப்பட்டு, 82 தடைகள் எழுப்பப்பட்டது. மொத்தமுள்ள 1392 தணிக்கை தடையில் 120 தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, நிலுவையாக உள்ள 1272 தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**பொது குறிப்புரை**

அறிக்கையாண்டில் நிர்வாகம் நல்ல முறையில் இயங்கி வந்தது. நிர்வாகத்தை திறம்பட நடத்த உதவிய உயர் திரு. நகரமன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் பல்வேறு துறை அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பு தந்த இவ்வலுவலக அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு உள்ளங்கனிந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர் (பொ)**
**அரக்கோணம் நகராட்சி**

**இடம் : நகராட்சி அலுவலகம்**
நாள் :